முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.229/2024 இன் அ.வ.எண்.65/2024

சரவணன் ..... மனுதாரர்/வாதி

/எதிர்/

அய்யப்பன் .... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கண்ணன் அவர்கள் அஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. செல்வகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவண்ங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

உத்தரவு

வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தின் புற அமைப்புகள், நான்கெல்லைகள் தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைசட்டம், 1908 உத்தரவு 26 விதி 9 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-

வழக்கு விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் பரிகாரத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது சிதம்பரம் வட்டம், உசுப்பூர் கிராமம் விநாயகா நகர் பிளாட் எண். 3 ஆக அமைந்துள்ளதாகவும், தனக்கு சொந்தமான சொத்து என்றும், தாவா சொத்தை தான் ஒரு ஜெயபாலனிடமிருந்து சரியான மறுபயனுக்கு கடந்த 19.08.2021 தேதியில் பதிவு செய்யப்பட்ட சுத்த கிரய ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்று அதில் வீடு கட்டி ஆண்டு அனுபவித்து வருகிறதாகவும், அதற்கு ஆதாரமாக கிரய பத்திரம், பட்டா, வீட்டுவரி ரசீது உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் தனது பெயரில் உள்ளதாகவும், தனது சொத்தின் மேற்புறம் உள்ள பிளாட் எண்.3 ன் மேல்பகுதியானது பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் பிரதிவாதி தற்போது வீடு கட்டி வருகிறதாகவும், தான் வெளிநாட்டில் வேலை செய்து வருவதாலும் தான் ஊரில் இல்லாததை பயன்படுத்தி, பிரதிவாதி முறையாக அளந்து, அதன் பிறகு வீடு கட்டாமல் வழக்கு சொத்தில் தனது அமைதியான அனுபோகத்தில் சுமார் 4 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டி வருகிறதாகவும், தான் வெளிநாட்டிலிருந்து கடந்த 6.11.2023 அன்று தாயகம் திருப்பி வந்து தாவா சொத்தை பார்த்தபோதுதான் தனது சொத்தின் மேல்புறத்தில் சுமார் 4 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வருகிறதாக தெரியவந்தது என்றும், இது சம்பந்தமாக தான் பிரதிவாதியை அணுகி அளந்து கல்நட்ட பிறகு வீடு கட்டி வேண்டியது தானே என்றும் முறையாக அளக்காமல் தனது இடத்தில் 4 அடி ஆக்கிரமித்து வீடு கட்டிவிட்டிற்கள் என்றும், கேட்டதற்கு, பிரதிவாதி தனது பேச்சை

கேட்காமல் தொடர்ந்து வீடு கட்டி வருகிறதாகவும், இதனால் தான் தாவா சொத்தை அளக்க முற்பட்ட போது பிரதிவாதி வீண் பிரச்சனை செய்துவந்தாலும் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசியும் பிரதிவாதியானவர் யார் பேச்சையும் கேட்க மறுத்து தொடர்ந்து தாவா சொத்தில் கட்டுமான பணியை மேற்கொண்டால் தான் தனது மனையினை அளப்பதற்காக வருவாய் துறையில் முறைப்படி கட்டணம் செலுத்தி நில அளவையர் மூலம் கடந்த 10.11.2023 ல் தாவா சொத்தை அளந்து பார்த்த போது தாவா சொத்தில் 4 அடியை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருப்பது தெளிவாக தெரியவந்தது என்றும், இதனால் தான் பிரதிவாதியை அணுகி ஆக்கிரமிப்பை அகற்ற கோரி கேட்டதற்கு பிரதிவாதி தான் இனி உன் இடத்தில் கட்டுமானம் செய்யமாட்டேன் என்றும், ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டுமானத்தை அகற்றிவிடுகிறேன் என்று வாய்மொழியாக உறுதியளித்தாகவும், தானும், பிரதிவாதியின் பேச்சை நம்பி கட்டுமானத்தை அகற்றிவிடுவார் என்று இருந்த நிலையில் பிரதிவாதியானவர் மீண்டும் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்புசெய்து கட்டியுள்ள கட்டுமான வேலையை தொடர்ந்து செய்துவருகிறதாகவும், பிரதிவாதியானவர் ஊரில் செல்வாக்கு மிகுந்தவராகவும், அரசயில் பின்புலம் மற்றும் பணபலம் மிக்கவர் என்பதாலும், வீடு மனை வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்துவருவதாலும் வழக்கு சொத்தை ஆக்கிரமித்து வீடு கட்டி விற்றுவிடலாம் என்ற நோக்கில் பிரதிவாதியானவர் தாவா சொத்தில் ஆக்கிரமித்து வீடு கட்டி விற்றுவிடலாம் என்ற நோக்கில் பிரதிவாதியானவர் தாவா சொத்தில் ஆக்கிரமித்து கட்டுமான பணியை விரைவாக செய்து வருகிறதாகவும்,

பிரதிவாதியின் இத்தகைய செயலால் தனக்கு மிகுந்த மனவேதனையும், மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளதாகவும், நீதிமன்றத்தால் மட்டுமே தனக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்பதால் தான் நீதிமன்றத்தில் தனது இடத்தில் 4 அடி ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டுமானத்தை அகற்றி தன்னிடம் காலி இடமாக ஒப்படைக்க கோரியும், வழக்கு முடியும் வரை தாவா சொத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எந்தவித பிரவேசமோ இடையூரோ செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்கிறதாகவும், வழக்கு சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டிவருவதால் தகுதி வாய்ந்த நில அளவையர் வைத்து நான்கு புற எல்லைகளையும் அளந்து கல்நட வேண்டியது இந்த வழக்கிற்கு இன்றியமையாததாகிறது என்றும், வழக்கு சொத்தின் புற அமைப்புகள், அதன் இயற்கை அளவீடுகள், நான்கெல்லைகள் இவற்றை தகுதிவாய்நத நில அளவையர் அளவீடு செய்வது இவ்வழக்கிற்கு மிக முக்கியமானது என்றும், இதற்கு நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து மேற்கண்டவற்றை குறித்து அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் சம்ர்பிக்க வேண்டிய இன்றியமையாத ஒன்றாகிறது என்றும், ஆணையாளர் சமர்பிக்கும் அறிக்கை வழக்கில் இருதரப்பினராலும் அளிக்கப்பட உள்ள வாய்மொழி சாட்சியத்தை பெருமளவு குறைக்கவல்லதாகும் என்றும், ஆகையினால் இந்த வழக்கிற்கு ஆணையர் ஒருவரை நியமிக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகிறது என்றும், இல்லாவிடில் தனக்கு ஈடு செய்யமுடியாத இழப்பும், பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே நீதிமன்ற ஆணயைர் தாக்கல் செய்துள்ள அறிக்கை

மற்றும் வரைபடத்தை ரத்து செய்து புதிய அல்லது அதே நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யது சரியான முறையில் வழக்கு சொத்தினை தாவா சொத்தின் புற அமைப்புகள், நான்கெல்லைகள் தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் அறிக்கை தாக்கல் செய்ய தாக்கல் செய்ய வேண்டப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிரிருரையின் சுருக்கம்

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் தாவா சொத்தினை அளவீடு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், மனை எண்.3 ன் சொத்தை சதுர அடி 3318 என்றும், நகரின் வரைபடத்தின் அளவு 3318 சதுர அடி என்றும், அதில் மேல்புரம் சுப்ரமணியின் குடும்பத்தாரின் சொத்தின் அளவு 1837 ½ சதுர அடி என்றும், கீழ்புரம் மனை எண்.3 ன் மீதமுள்ள 1480 சதுர அடி என்றும், சுப்ரமணியன் குடும்பத்தார் கிரயம் பெற்ற 1837 ½ சதுர அடியின் சக்குபந்தி:

ரி.சர்வே எண்.31/1-ல்

வடபுரம் - 44.5

தென்புரம் - 43

கீழ்புரம் -42

மேல்புரம் - 42 ல் மனையாகும்.

ஜெயபாலன் கிரயம் பெற்றது:

சர்வே எண்.31/1-ல் மனை எண்.3 ன் வரைபட அளவில் மீதமுள்ள கீழ்புரம் 34.5 மற்றும் நகரின் உரிமையாளரின் சொந்த உபயோகம் என காட்டப்பட்டுள்ள அளவு

அகலம் 10 அடி, சர்வே எண். 31/2 ல் கட்டுப்பட்டது ஆகும். இவை இரண்டும் சர்வே எண்களும் சேர்ந்து காட்டப்பட்டுள்ள சக்குபந்தி:

வடபுரம் -34.6+0=44.6

தென்புரம் - 33+10=43

கீழ்புரம் -42

மேல்புரம் -42

மனையானது சர்வே எண்.31/1-ல், 31/2-ல் கட்டுப்பட்ட மொத்த அளவு -1837.6 ஆகும். ஜெயபாலன், காந்தபாய் Power Agent சுரேஷ்குமாரிடமிருந்து கிரயம் பெறும் போது சர்வே 31/2 ல் கட்டுப்பட்ட 357 சதுர அடி பத்திர பதவில் ஜெயபாலனுக்கு பிரித்து காட்டப்படவில்லை என்றும், சர்வே எண்.31/1 மட்டுமே காட்டப்பட்டு உள்ளதாகவும், இதனை சரி செய்யாமல் ஜெயபாலன் குடும்பத்தார் சரவணன் வசம் விற்பனை செய்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வட்டாட்சியர் மனை எண்.3 ஐ ஆய்வு செய்யாமல் சரவணன் பெயருக்கு பட்டா 357 சதுரடி கூடுதலாக சர்வே எண்.31/1 ல் பட்டா வழங்கப்பட்டு உள்ளதாகவும், எதிர்மனுதாரர் ஐயப்பன், சுப்ரமணியன் குடும்பத்தாரிடம் வாங்கிய சதுர அடியின் அளவு 1496- பட்டாவின் படி சுப்ரமணியன் குடும்பத்தாருக்கு மீதம் உள்ள இடம் 357 சதுரடி அடி என்றும், இது மனுதாரர் சரவணனுக்கு பாத்தியமான இடம் அல்ல என்றும், சுப்ரமணியன் குடும்பத்தாருக்கு பாத்தியமான இடம் என்றும், எனவே, சர்வேயர் அளவீடு செய்யும்போது சுப்பரமணியன் கிரயம் பெற்ற மொதத அளவு 1837 1/2 சதுர அடியை அளவீடு செய்து, பின்னிட்டு வாதி சரவணன் இடத்தையும், பிரதிவாதி ஐயப்பன் இடத்தையும் அளவீடு செய்யுமாறு பிரதிவாதி பிரார்த்திகிறதாகவும்,

சரவணன் பத்திர பதிவு செய்யப்பட்ட அளவு 31/1ல் - 1480 சதுர அடி ஆகும். இது மட்டுமே சரவணனுக்கு பாத்தியமானது என்றும், ஆனால் பத்திர பதிவில் 31/1ல் காட்டப்பட்ட 1837½ சதுர அடி என தவறாக காட்டப்பட்டு உள்ளதாகவும், தவறாக காட்டப்பட்ட 1837½ சதுர அடிக்கு சர்வே எண்.31/1ல் 1837½ சதுர அடி என பட்டா பெற்றது செல்லதக்கது அல்ல என்றும், எனவே சுப்பரமணியன் இடம் மொத்த மனையின் அளவை அளவீடு செய்து பின்னிட்டு மனுதாரர் சரவணன் மற்றும் எதிர்மனுதாரர் ஐயப்பன் இடத்தினை அளவீடு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6.தீர்வு</u>:-

வழக்கு விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் பரிகாரத்திற்கு தாக்கல் செய்யப்பட்டு, எழுவினா வரைவதற்காக நிலுவையில் உள்ளது.

மனு, ஆட்சேபனை, வழக்கு ஆவணங்கள், சொத்து அட்டவணை விவரம், பரிசீலனை செய்யப்பட்டது.

6.1) பிரதிவாதி தற்போது வீடு கட்டி வருகிறதாகவும், தான் வெளிநாட்டில் வேலை செய்துவருவதாலும் தான் ஊரில் இல்லாததை பயன்படுத்தி, பிரதிவாதி முறையாக அளந்து, அதன் பிறகு வீடு கட்டாமல் வழக்கு சொத்தில் தனது அமைதியான அனுபோகத்தில் சுமார் 4 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டி வருகிறதாகவும், தான் வெளிநாட்டிலிருந்து கடந்த 6.11.2023 அன்று தாயகம் திரும்பி

வந்து தாவா சொத்தை பார்த்தபோதுதான் தனது சொத்தின் மேல்புறத்தில் சுமார் 4 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வருகிறதாக தெரியவந்தது என்றும், தாவா சொத்தை அளக்க முற்பட்ட போது பிரதிவாதி வீண் பிரச்சனை செய்துவந்தாலும் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசியும் கட்டுமான பணியை மேற்கொண்டதால் மனையினை அளப்பதற்காக வருவாய் துறையில் முறைப்படி கட்டணம் செலுத்தி நில அளவையர் மூலம் 10.11.2023 ல் தாவா சொத்தை அளந்து பார்த்த போது தாவா சொத்தில் 4 அடியை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருப்பது தெளிவாக தெரியவந்தது என்றும், அதனை கேட்ட போது அகற்றிவிடுவதாக வாய்மொழியாக உறுதியளிக்கும் கட்மான வேலையை தொடர்ந்து செய்துவருகிறதாகவும், இதனால் ஆணையர் நியமிக்க வேண்டப்பட்டுள்ளது.

6.2) எதிர்மனுதாரர் ஆட்சேபினையில், மனை எண்.3 சதுர அடி 3318 என்றும், நகரின் வரைபடத்தின் அளவு 3318 சதுர அடி என்றும், அதில் மேல்புரம் சுப்ரமணியின் குடும்பத்தாரின் சொத்தின் அளவு 1837 1/2 சதுர அடி என்றும், கீழ்புரம் மனை எண்.3 ன் மீதமுள்ள 1480 சதுர அடி என்றும், ஜெயபாலன் கிரயம் பெற்றது சர்வே எண்.31/1-ல் மனை எண்.3 ன் வரைபட அளவில் மீதமுள்ள கீழ்புரம் 34.5 மற்றும் நகரின் உரிமையாளரின் சொந்த உபயோகம் என காட்டப்பட்டுள்ள அளவு அகலம் 10 அடி, சர்வே எண். 31/2 ல் கட்டுப்பட்டது என்றும், இவை இரண்டும் சர்வே எண்களும் சேர்ந்து காட்டப்பட்டுள்ள சக்குபந்தி: வடபுரம் -34.6+0=44.6, தென்புரம்- 33+ 10= 43, கீழ்புரம் -42, மேல்புரம் 42 மனையானது சர்வே எண்.31/1-ல், 31/2-ல் கட்டுப்பட்ட மொத்த அளவு -1837.6 ஆகும். ஜெயபாலன், காந்தபாய் Power Agent சுரேஷ்குமாரிடமிருந்து

கிரயம் பெறும் போது சர்வே 31/2 ல் கட்டுப்பட்ட 357 சதுர அடி பத்திர பதவில் ஜெயபாலனுக்கு பிரித்து காட்டப்படவில்லை என்றும், சர்வே எண்.31/1 மட்டுமே காட்டப்பட்டு உள்ளதாகவும், இதனை சரி செய்யாமல் ஜெயபாலன் குடும்பத்தார் சரவணன் வசம் விற்பனை செய்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,

வட்டாட்சியர் மனை எண்.3 ஐ ஆய்வு செய்யாமல் சரவணன் பெயருக்கு பட்டா 357 சதுரடி கூடுதலாக சர்வே எண்.31/1 ல் பட்டா வழங்கப்பட்டு உள்ளதாகவும், எதிர்மனுதாரர் ஐயப்பன், சுப்ரமணியன் குடும்பத்தாரிடம் வாங்கிய சதுர அடியின் அளவு 1496- பட்டாவின் படி சுப்ரமணியன் குடும்பத்தாருக்கு மீதம் உள்ள இடம் 357 சதுரடி அடி என்றும், இது மனுதாரர் சரவணனுக்கு பாத்தியமான இடம் அல்ல என்றும், சுப்ரமணியன் குடும்பத்தாருக்கு பாத்தியமான இடம் என்றும், எனவே, சர்வேயர் அளவீடு செய்யும்போது சுப்பரமணியன் கிரயம் பெற்ற மொதத அளவு 1837 1/2 சதுர அடியை அளவீடு செய்து, பின்னிட்டு வாதி சரவணன் இடத்தையும், பிரதிவாதி ஐயப்பன் இடத்தையும் அளவீடு செய்யுமாறு பிரதிவாதி பிரார்த்திகிறதாகவும், சரவணன் பத்திர பதிவு செய்யப்பட்ட அளவு 31/1 ல் - 1480 சதுர அடி என்றும், இது மட்டுமே சரவணனுக்கு பாத்தியமானது என்றும், ஆனால் பத்திர பதிவில் 31/1 ல் காட்டப்பட்ட 1837½ சதுர அடி என தவறாக காட்டப்பட்டு உள்ளதாகவும், தவறாக காட்டப்பட்ட 1837½ சதுர அடிக்கு சர்வே எண்.31/1 ல் 1837½ சதுர அடி என பட்டா பெற்றது செல்லதக்கது அல்ல என்றும், எனவே சுப்பரமணியன் இடம் மொத்த மனையின் அளவை அளவீடு செய்து பின்னிட்டு மனுதாரர் சரவணன் மற்றும் எதிர்மனுதாரர் ஐயப்பன் இடத்தினை அளவீடு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

6.3) இருதரப்பையும் ஆராய்ந்து பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர் தரப்பில் ஆணையர் நியமிக்க அவசியம் இல்லை என ஆட்சேபிக்கவில்லை. மாறாக, சர்வேயர் அளவீடு செய்யும்போது சுப்பரமணியன் கிரயம் பெற்ற மொத்த அளவு 1837 1/2 சதுர அடியை அளவீடு செய்து, பின்னிட்டு வாதி சரவணன் இடத்தையும், பிரதிவாதி ஐயப்பன் இடத்தையும் அளவீடு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது. சரவணன் பத்திர பதிவு செய்யப்பட்ட அளவு 31/1ல் - 1480 சதுர அடி மட்டுமே சரவணனுக்கு பாத்தியமானது என்றும், ஆனால் பத்திர பதிவில் 31/1 ல் காட்டப்பட்ட 1837½ சதுர அடி என தவறாக காட்டப்பட்டு உள்ளதாகவும், தவறாக காட்டப்பட்ட 1837½ சதுர அடிக்கு சர்வே எண்.31/1 ல் 1837½ சதுர அடி என பட்டா பெற்றது செல்லதக்கது அல்ல என்றும், எனவே சுப்பரமணியன் இடம் மொத்த மனையின் அளவை அளவீடு செய்து பின்னிட்டு மனுதாரர் சரவணன் மற்றும் எதிர்மனுதாரர் ஐயப்பன் இடத்தினை அளவீடு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது, எனவே நீதிமன்றம் வழக்கு சர்வே எண் முழு விஸ்தீரணத்தையும் இருதரப்பின் ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களை கொண்டும், சரியான முறையில் தரப்பினர்களின் சொத்துகளை ஆணையர் தகுதி வாய்ந்த நிலஅளவையர் உதவியுடன் அளக்கும்படி தாவா சொத்தின் புற அமைப்புகள், அதன் இயற்கை அளவீடுகள், நான்கெல்லைகள், ஆக்கிரமிப்பு பற்றி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட அவசியம் உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7) முடிவாக, மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் செல்வி.மீனாட்சி நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற

ஆணையரின் ஊதியம் ரூ.10,000/- என நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் ஊதியத்தை ஒரு வார காலத்திற்குள் இருதரப்பும் தலா ரூ.5,000/- குறிப்பாணை தாக்கல் செய்து நேரடியாக அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இருதரப்புக்கும் அறிவிப்பு கொடுத்து பின்னர் நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உதவியுடன் வாரண்டின் படி வழக்கு சொத்து சர்வே எண் முழு விஸ்தீரணத்தையும், இருதரப்பின் ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களை கொண்டும், சரியான முறையில் ஆணையர், தகுதி வாய்ந்த நிலஅளவையர் உதவியுடன் அளக்கும்படி தாவா சொத்தின் புற அமைப்புகள், அதன் இயற்கை அளவீடுகள், நான்கெல்லைகள், ஆக்கிரமிப்பு பற்றியும் அறிக்கை மற்றும் வரைபடம் 45 நாட்களுக்குள் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. தவறும்போது சரியான விளக்கம் இல்லாத பட்சத்தில் வாரண்ட் ரத்து செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd- S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd- S.Padmavathi)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.229/2024

இன்

அ.வ.எண்.65/2024

நாள்.07.04.2026